**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No.S.T.C.No. 57/2025**

**Deposition of Witness for Petitioner PW2(LW2)**

| | | |
|---|---|---|
| **Name** | : | சந்திரமூர்த்தி |
| **Father's Name** | : | வேலு |
| **Village** | : | கோயம்பத்தூர் |
| **Taluk** | : | கோயம்பத்தூர் |
| **Calling** | : | உதவி ஆய்வாளர் |
| **Age** | : | 34 |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**26.02.2026** **Witness Signature :**

**(இந்த சாட்சி விசாரணை காணொளி மூலம் பதிவு செய்யப்படுகிறது. காணொளியின் ஒரு முனையில் நீதிபதியும் மற்றும் போலீசார் மற்றம் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரும் நீதிமன்ற ஊழியர்களும் இருக்கிறார்கள். காணொளியின் மற்றொரு முனையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ள சாட்சியான திரு. சந்திரமூர்த்தி அவர்களும் தயாராக உள்ளார்கள். இரு தரப்பினரின் சம்மதத்தின் பேரில் இச்சாட்சி விசாரணை காணொளி மூலம் பதிவு செய்யப்படுகிறது.)**

**புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை 17.20 P. M</u>**

1. நான் தற்போது கோவை சட்டவிரோதமன் அகழ்வு வழக்குகள் புலனாய்வு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தேவாலா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, கடந்த 24.12.2024ம் தேதி, காலை சுமார் 06.30 மணியளவில், உயரதிகாரிகளின் உத்தரவுபடி, லாட்டரி சிறப்பு தேடுதல் வேட்டையாக, கூடலூர் காவல் நிலைய ஆய்வாளர் துறைராஜ் என்பவருடன் சேர்ந்து, என்னுடம் காவலர் பிரவின் அன்சிப், காவலர் சசிக்குமார், காவலர் முத்துக்குமார் ஆகியோருடன் கோத்தகிரி அரசு மருத்துவமனை அருகில், கண்காணித்து வரும்பொழுது, ரகசிய தகவலின் பேரில் சுமார் 08.00 மணிக்கு க.எண். 32/17B, ஷாஜனா ரெசிடன்சி என்ற வீட்டின் முன்பு ேஹாண்டா ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் சுமார் 45 வயது மதிக்கத்தக்க, என்ற நபரை பிடித்து விசாரித்தபோது அவர் முன்னுக்குபின் முரணாக பதில் சொன்னார். பின்னர் தனது பெயரை, ஜோஸ்குமார், த.பெ. அன்புரோஸ் என்றும், தனது இருசக்கர வாகனத்தில் கோத்தகிரி அரசு மருத்துவமனை மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதியில் சென்று அங்கு உள்ள ஏழை எளிய மக்களுக்கு செல்போன் மூலம் லாட்டரி விற்பனை செய்து வருவதாக சொன்னார். பின்னர் அவரிடமிருந்து TN 43 H 5313 என்ற பதிவெண் கொண்ட வாகனம் மற்றும் 2 செல்போன் மற்றும் ரூ. 1,46,433/– ஆகியவற்றை கைப்பற்றினோம். மேற்படி வழக்கு சொத்தை அ.சா.1ன் மூலம் சா.பொ.1 முதல் சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்பட்டது. கைப்பற்றிய மகஜரில் பொது ஜன சாட்சிகள் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை என்பதால், நானும் என்னுடன் இருந்த பிரவின் அன்சித்தும் சாட்சிகளாக சாட்சி கையொப்பம் செய்தோம்.

தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கை யெழுத்து என்னுடையதுதான். **அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஜோஸ்குமார் என்பவரை பார்த்தால் எனக்கு தற்போது அடையாளம் தெரியும், அவர் ஆஜர் எதிரி. பின்பு கோத்தகிரி புலனாய்வு பிரிவிற்கு சென்று தனியறிக்கையாக தாக்கல் செய்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக கோத்தகிரி உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

1. என்னை உதவி ஆய்வாளர் விசாரிக்கும்போது, நான் மேலதிகாரிகள் உத்தரவு ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை. நான் காவல் ஆய்வாளர் துரை ராஜ் என்பவருடன் அரசு 4 சக்கர வாகனத்தில் சீருடையில்தான் வந்தோம் என்றால் சரிதான். கோத்தகிரி மருத்துவமனை அருகில் தான் காவல்நிலையம் உள்ளது என்றால் எனக்கு அவ்வளவா தெரியாது. நான் கோத்தகிரி காவல் நிலையத்திற்கு எப்பொழுது முதல் முறையாக வந்தேன் என்றால் அன்று தான் முதல் முறையாக சிறப்பு அலுவலராக வந்தேன். நான் கோத்தகிரி காவல் நிலையத்தில் ரிபோர்ட் நான் ஒன்றும் செய்யவில்லை. கோத்தகிரி காவல் நிலையம் எதிரேதான் கோத்தகிரி மருத்துவமனை உள்ளது என்று எனக்கு தெரியாது. ரகசிய தகவல் யாரிடமிருந்து வந்ததென்றால் காவல் ஆய்வாளரிடமிருந்து வந்தது. நாங்கள் யாரும் கோத்தகிரி அதிகார வரம்பு அதிகாரிகள் இல்லை என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தை யார் காண்பித்தார் என்றால் ரகசிய தகவலாளி, காவல் நிலையத்திலிருந்து சுமார் 2 கிலோமீட்டர் தூரத்தில் சம்பவ இடம் உள்ளது, அது குடியிருப்பு பகுதி என்றால் சரிதான்.

2. அங்கு எந்தவிதமான மக்களும் இல்லை என்றால் ஒரு சிலர் இருந்தார். எதிரி செல்போனை எந்த பாக்கெட்டில் வைத்திருந்தார் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. கைப்பற்றிய பணத்தை அவரது வண்டியிலிருந்து எடுத்தோம். அவரிடமிருந்து நாங்கள் எந்தவிதமான லாட்டரி டிக்கெட்டும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். தனியறிக்கையை ஆய்வாளர் காவல் நிலையத்தில் வைத்து எழுதினார். என்னை போலிசார் விசாரிக்கும் போது செல்போன், பணம், வாகனம் மட்டும்தான் கூறியுள்ளேனா என்றால் சரிதான். ஆய்வறிக்கை தயார் செய்த போதுதான் , கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை, மகஜர் அதற்கு முன்பாகவே தயார் செய்யப்பட்டது. அதில் யார் கையெழுத்து்போட்டோம் என்றால் நானும் காவலர் அனுசித்தும் ஆவார். சட்டத்திற்கு விரோதமாக எதிரியின் வீட்டிற்குள் நுழைந்து சட்டி, பானையில் இருந்து பணத்தை கைப்பற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

Sd/- G. Amirdham, 26.02.2026
Judicial Magistrate,
Kotagiri